

# 3

# விடியல்

**கொத்தடிமைகளாக அவதிப்பட்ட சிறுவர்கள் மீட்பு**

**கேபிள் குழி வெட்டி வயிற்றுப்பிழைப்புக்கு வழி தேடும் சிறுவர்கள்**

**வய ல் தாய் வீசிவிட்டுச் சென்ற பச்சிளம் குழந்தை**

**கல்குவாரியில் வெடிவிபத்து குழந்தைத் தொழிலாளர்கள் ப**

- பத்திரிகைத் தலைப்புச் செய்திகளைப் படியுங்கள்.ஏன் இந்த அவலநிலை? விவாதித்துக் கருத்துகளைக் கூறுங்கள்?
- சமூகத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் பற்றிய வேறு செய்திகளை உங்களால் சொல்ல முடியுமா?
- இதுபோன்று குழந்தைகளுக்கு ஏற்படும் இன்னல்கள் யாவை?

# யாரிடம் சொல்  நான் அழுவேன்?

விடிய  லே முளிச் செழுந்தா
முகத்தைக் கழுவ நேரமில்லே
குப்பைக் காகிதம் தேடிப் போயி
கோணிச் சாக்குல நெரப்பணும்



பஸ்டாண்டிலே காத்து நின்னு
மூட்டை முடிச்சு தூக்கணும்
மீன் சிப்பத்தை அளந்து போட்டு
கூறு கூறா அடுக்கணும்

பொழுதுசாய நேரத்துல
ரோட்டோரம் போய் நின்னா
பருத்திப் பாலு கடையிலே
கிளாசைக் கழுவிக் கொடுக்கணும்.

கடை முடிஞ்ச நேரத்துல
மிச்ச மீதி பாலுல
ஒரு கிளாசு இனாம்...
ஒத்த ரூவா கூ  !

வயித்தக் கழுவுறது பெரும்பாடு
நெனச்சுப் பாத்தா நான் ஒரு மாடு
முழிச்சு முழிச்சுப் பாக்குறேன்
மனசுக் குள்ளே வாடுறேன்

என் வயசுப் புள்ளைக் கூட்டம்
    எப்படி எப்படி டிரெஸெல்லாம்
இஸ்டம் போல போட்டுக்கிட்டு
    இஸ்கூலுக்குப் போவுது

அப்பா அம்மா கூடவே
    சிரிச்சி சிரிச்சிப் பேசுது
எங்கூட சிரிச்சிப் பேச
    யாரிருக்கா... சொல்லுங்க?



என்னைப் பார்க்கும் பார்வையிலே
    எரிச்சலைத்தான் பாக்குறேன்
பேசும் வார்த்தை சுத்தத்திலே
    ஒட்டுமில்லே உறவுமில்லே

காத்துல பறக்கும் பலூனைப்போல்
    அந்தரத்துல தள்ளாடுறேன்
ஆதரவில்லாம தவிக்கிறேன்
    யாரிடம் சொல்    நான் அழுவேன்?

**-கவிஞர் பரம்பைச் செல்வன்**

## செயல்பாடுகள்

- “நெனச்சுப் பாத்தா நான் ஒரு மாடு” என்று சிறுவன் கூறுவதற்கான காரணங்கள் யாவை?
- பள்ளிக்கூட வாயி ல் நிற்கும் ஏழைச்சிறுவனின் உள்ளம் என்னென்ன நினைக்கின்றது? எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் வட்டாரச்சொற்களைப் பட்டியலாக எழுதுங்கள். அவற்றைத் திருந்திய வடிவில் மாற்றுங்கள்.
- உங்கள் வட்டாரத்தில் இவர்களைப் போன்ற குழந்தைகள் உள்ளனரா? அவர் களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?

# கொழுந்துகளை நறுக்கும் வேர்கள்

டீச்சர் சொன்னதைக் கேட்டதும் மற்ற பிள்ளைகளை விட சரஸ்வதிக்குத் தான் மிகவும் கலக்கமாக இருந்தது. ஐந்தாம் வகுப்பை முடித்து விட்டு அந்த வருஷம் தான் ஆறாம் வகுப்பிற்குள் நுழைந்திருந்தாள். புதுசாக வந்திருந்த அந்த டீச்சர் எதிலும் கண்டிப்பானவர் என்கிற கண்டுபிடிப்பு, பிள்ளைகளுக்கு பயத்தை உருவாக்கியது.

“ஸ்கூல் தொறந்து மாசம் ஒண்ணாகப் போவுது! இன்னமும் வாங்க வேண் டிய பொஸ்தகங்களெ வாங்காமெ இருக்கிறதைப் பார்த்தா படிப்பு மேல அக்க றையில்லாமெ கடனுக்கு வந்துட்டு போறதா தான் அர்த்தம்...”

சரஸ்வதியின் காதுகள் டீச்சர் கூறிய அந்த வார்த்தைகளின் வெப்பத்தை உள்வாங்கிக் கொண்டன. எப்படியும் இன்னும் பத்து நாட்களுக்குள் எல்லாப் புத்தகங்களையும் வாங்கி விடலாம் என்கிற தைரியம் அவளுக்கு நிரம்ப இருந் தது. ஆனால், அவளுடைய தந்தையைப் பற்றி நினைத்தாலே மனதுக்குக் கஷ் டமான வ உண்டாவது போ ருந்தது. அவளுக்குப் புத்தி தெரிந்த நாள் தொட்டு, தந்தை வேலப்பன் நிதானம் இல்லாத குடிகாரனாகக் குடும்பத்தைச் சிதைவு பண்ணிக் கொண்டிருந்தான்.

அவன் எந்நேரமும் குடித்துவிட்டு மதிமயங்கிக் கிடப்பவனும் அல்ல! காலை யில் விடிவதற்கு முன்பே வீட்டை விட்டு மலைக்குக் கல்லுடைக்கப் போய் விடுவான். பொழுது விழும்வரை கடுமையாக வேலை செய்து அன்றைக்கு வாங்கிய கூ ப்பணத்தில் முக்கால் பகுதியைக் குடித்துவிட்டுத் தள்ளாடித் தள் ளாடி வீடு வந்து சேர்ந்து கதவைத் தட்டுவான்.

குடும்பப் பொறுப்பைக் கொஞ்சங்கூட உணராமல் கூ ப்பணத்தைக் குடித்தே கரைத்துக் கொண்டிருக்கிற வேலப்பனின் செய்கையைத் தன்னுடைய தாயின் கண்ணீர்த் துளிகளில் இருந்து அவள் வெகு நுட்பமாக அறிந்து வைத் திருந்தாள்.

அம்மாவிடம் தனக்கு வாங்க வேண்டிய புத்தகங்களுக்கான பணத்தைக் கொடுக்க சக்தியில்லை. வேறு யாரிடமும் போய்க் கேட்கவும் சொந்தபந்தங் கள் இல்லை.

சரஸ்வதிக்காகவே இயற்கை வழி அமைத்துக் கொடுத்த மாதிரி பள்ளிக் கூடம் திறக்கிற தறுவாயில், ஊரை அடுத்த காடுகளில் வளர்ந்திருந்த வேப்ப மரங்கள் சரஸ்வதியின் மனதுக்கு ஆறுதலாய் அமைந்தன. வேப்பமரங்களில் இருக்கும் காய்கள் கனிந்து, அவை மரங்களில் இருந்து கீழே மண்ணில் விழுந்து கிடக்கும். அந்த வேப்பம்பழங்களுக்குள் இருக்கும் கொட்டைகளைக் கூடைகளில் பொறுக்கிச் சேமித்து விற்பது வழக்கம்.

ஒருபடி கொட்டை, ஐம்பது பைசாவி ருந்து எழுபத்தைந்து பைசா வரையிலும் போகும். ஒரு நாளைக்கு எப்படியும் நாலைந்து படிகள் வரை பொறுக்கிவிட வேண்டும் என்பதில் நேரத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் சுழன்று கொண்டிருந்தாள்.



வேப்பங்கொட்டை விற்பதன் மூலம் கிடைக்கிற பணத்தைக்கொண்டு தான் புத்தகங்கள் வாங்கி இவள் கடந்த இரண்டு வருஷங்களாகப் படித்து வந்திருக்கிறாள். இவளுக் கென்றே பழங்கள் கனிந்து தரையில் விழுந்து கிடப்பதாக எண்ண வேண்டி இருந்தது.

காலையில் வானம் மப்பலாக இருக்கும்போதே எழுந்து தலைமாட்டில் வைத் திருக்கிற அந்தச் சிறிய கூடையை எடுத்துக்கொண்டு தெற்கேயிருக்கும் காடு களை நோக்கி ஓடிவிடுவாள். பள்ளிக்கூட மணி அடித்துச் சிறிது நேரங்கழித்து அவசர அவசரமாக இவள் பள்ளிக்குள் நுழைவதைப் பார்க்கப் பரபரப்பாக இருக்கும்.

மதிய உணவுக்குக் கூட இவள் காத்திருப்பதில்லை. அந்நேரத்தில் இவள் ஓரிருபடி கொட்டைகளைப் பொறுக்கிவிடுவாள்.

இந்தத் தடவை ஆறாம் வகுப்புக்கு இவள் வாங்க வேண்டிய புத்தகங் களில் பாதியை வாங்கியாயிற்று. இன்னும் வாங்க வேண்டியவைகளுக்குப் பத்துப் பனிரெண்டு ரூபாய் சேர்த்தாக வேண்டும். குறைந்த நாட்களே இருக்கின்றன.

எப்படியும் சாயங்காலத்திற்குள் சைக்கிளில் வருகிற அந்த வியாபாரி சரஸ் வதியின் கண்களில் தட்டுப்படாமல் போய்விட முடியாது.

பள்ளியில் பாடங்கள் நடந்துகொண்டிருக்கும்போது சிறிது தூரத்தில் ஒ க் கிற ஐஸ்காரனின் சப்தங்கூட "வேப்பங்கொட்டை குடுக்கறது இருக்கா...! வேப் பங்கொட்டை குடுக்கறது இருக்கா..." என்று அந்த வியாபாரி போடுகிற குரல் போலவேதான் இவளுடைய காதுகளுக்குள் நுழையும்.

வருகிற திங்கட் கிழமைக்குள் புத்தகங்கள் முழுவதையும் வாங்கியிருக்க வேண்டும் என்று டீச்சர் கெடுவைத்திருந்தார். வெள்ளிக்கிழமைக்குள் கொட் டைகளை விற்றுப் பணம் வாங்கி அன்று ஸ்கூல் முடிவதற்குள்ளாகவே டீச்சர் கையில் கொடுத்துத் தனக்கு வாங்க வேண்டிய புத்தகங்களையும் வாங்கி வரச் சொல் விடலாம் என்று சரஸ்வதி முடிவு செய்திருந்தாள்.மனது முழுக்கவும் இந்த நினைப்பே நிரம்பியிருந்தது.

கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே வியாபாரியை எதிர்பார்த்துக் காத்தி ருந்து காத்திருந்து கண்ணீர் விட்டு அழுகிற நிலைமைக்கு வந்து விட்டாள்.

வியாபாரி வரவில்லை. இவளால் நம்பத்தான் முடியவில்லை. ஒருவேளை தான் பள்ளியில் இருக்கும்போது அந்த வீதி வழியே வந்துவிட்டுச் சீக்கிரத்தி லேயே போய்விட்டானோ? மனச்சஞ்சலத்தில் நெஞ்சம் என்னென்னவோ கேள்விகளைக் கேட்டுத் துடித்தது. கண்களில் கண்ணீர் சூடாகிக்கொண்டிருந் தது. வியாழன் இரவு வரை பார்த்தாயிற்று. வியாபாரி வரவில்லை.

வெள்ளிக்கிழமை வெளிச்சத்துடன் விடிந்தது. படுக்கையை விட்டு எழுந் ததும் அந்தக் கோணிப்பைக்குள் இருந்த வேப்பங்கொட்டைகளைத் தான் இவள் நம்பிக்கையோடு பார்த்தாள். இறுக்கமாகக் கட்டி வைத்துவிட்டு, அந்தக் கோணிப் பையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு கும்பிட்டாள். அதுதான் அவ ளைக் காப்பாற்ற வேண்டும்.

பள்ளிக்கூடம் போய்விட்டு இடைவேளையின்போது ஒரு தடவை வந்து வீதிகளில் பார்த்து வியாபாரி வந்திருக்கிறானா என்பதைத் தெரிந்து கொண்டு மறுபடியும் போனாள். மதிய உணவு வரை அவன் வரவில்லை. மதியத்துக்கு மேல் பள்ளி தொடங்கிப் பாடங்கள் நடந்தன. இவளது நினைவுகளோ நெருப் பின் மேல் நடந்தன.

இடைவேளை வந்தது. இவள் வகுப்பில் படிக்கும் சரோஜா கூறிய செய்தி கவலையின் ஒட்டுமொத்தத்தையும் விரட்டி அடிப்பதைப்போல் தோன்றியது.

வியாபாரி வடக்கு வீதியில் வேப்பங்கொட்டைகள் வாங்குவதற்காகச் சைக் கிளில் சுற்றிக்கொண்டிருப்பதாக அவள் கூறியதைக் கேட்டதும், சரஸ்வதி வில் ல் இருந்து புறப்பட்ட அம்பாகப் பாய்ந்து ஓடினாள். வகுப்பில் டீச்சர் வந்து உட்கார்ந்ததைப் பார்ப்பதற்குக் கூட இவளுக்கு நேரமில்லை. அப்படியே யாரா வது தடுத்தாலும் இவள் நிற்கமாட்டாள்.

டீச்சர் கூறிய திங்கட்கிழமைக் கெடுவுக்குள் புத்தகங்கள் வாங்கி விடுகிற காரியம் நிறைவேறிவிடும். சரஸ்வதி வேகமாக ஓடினாள். இவளுடைய வீட்டை அடுத்திருந்த வீதியின் கடைசியில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டே அந்த வியா பாரி போய்க்கொண்டிருந்தான்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க அவனிடம் ஓடிச் சென்று“ஐயா... ஐயா வாங்க! எங்க வூட்லெ வேப்பங்கொட்டைக் கொண்டாந்து நெறையா வெச்சிருக்கிறேன்! ஒரு வாரமா உங்களே எதிர்பார்த்துட்டு இருக்கறேனுங்க...” என்று கையோடு கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

கேரியரில் ஒரு மூட்டை நிறைய வேப்பங்கொட்டையின் கனம்! சைக்கிளை ஸ்டேண்ட் போட்டு வாச ல் அவன் நிறுத்தினான்.

“சீக்கிரமாக எடுத்துட்டு வா அம்மிணி நேரமாவுது. நான் போவோணும்.”

இவள் வீட்டுக்குள் நுழைந்து உள்ளே வைத்திருந்த கோணிப்பையைத் தேடி னாள். வீட்டின் ஒரு மூலையில் அது நான்காக மடிக்கப்பட்டுப் பத்திரமாக வைக் கப்பட்டிருந்தது. சரஸ்வதிக்குக் கால்கள் ஒரு நிலையில் நிற்கவில்லை. ஆத்தி ரமும் வருத்தமும் ஒன்று சேர்ந்து இவளைப் பந்தாடத் துவங்கின.

தேடினாள்! அந்தக் கோணிப்பையை எடுத்து உதறி உதறித் தேடினாள்! மருந் துக்குக்கூட ஒரு தூசியையும் அதில் காணவில்லை.

அப்போது...



“ஏய்யா... யேவாரி! கொஞ்ச நேரத்திற்கு மிந்தித் தானய்யா இங்கெ குத்துக்கல்லாட் டம் வந்து இருபத்தியஞ்சு படி கொட் டைய அளந்து வாங்கிட்டுப் போனியே! மறுக்காவும் எதுக்கு நீயி வந்திருக்கிறே...”

கால்கள் நிலத்தில் ஒட்டாமல் குடிவெறியில் பிதற்றிக் கொண்டு வேலப்பன் தான் வாச ல் நின்றுகொண்டிருந்தான்.

இதைக் கேட்டு வெளியே ஓடி வந்த சரஸ்வதியைப் பார்த்து “ஏம்மிணி!” இதுதான் உங்க வூடா?... சித்த நேரத்திற்கு மிந்தித்தானெ இவுரு கூட்டியாந்து பதினஞ்சு ரூபாய்க்கு வேப்பங்கொட்டையை அளந்து போட்டாரு! செரிசெரி! மறுவாட்டி வர்றப்ப நா வர்றேன்.” என்று கூறிவிட்டுச் சைக்கிளில் ஏறி வீதியைக் கடந்து அவன் போய்விட்டான்.

தன்னுடைய தந்தையின் இந்தச் செயலைச் சுட்டு எரித்து விடுகிற கோபத் தோடு பார்த்தபடி நின்றிருந்த சரஸ்வதி “அப்பா அப்பா!” என உஷ்ணமான குர ல் உலுக்கினாள்.பின் அங்கிருந்து விலகிச் சென்று குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள் சரஸ்வதி! கொளுத்தும் வெய்யி ன் உக்கிரம் அந்தக் கண்ணீரில் இருந்தது.

இவள் தொடர்ந்து அழுது கொண்டிருந்தாள். மாலை மயங்கியது.நீர் வழிந்த கன்னத்தோடு வழக்கம்போல் எழுதும் நாட்குறிப்பை எழுதத் தொடங்கினாள்...

### குழந்தைகளின் உரிமைகள்

- குழந்தைகளின் தேவைகளுக்கேற்பப் போதிய முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.
- குழந்தைத் தொழிலை ஒழிக்க வேண்டும்.
- பெண் குழந்தைகள் என்ற வேறுபாட்டை இல்லாமலாக்க வேண்டும்.
- எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக்கல்வி வழங்க வேண்டும்.
- குழந்தைகளுக்கெதிரான பல்வேறு சுரண்டல்களையும் இன்னல்களையும் இல்லாமலாக்க வேண்டும்.

கவிதையிலும், கதைப்பகுதியிலும் குழந்தைகளின் உரிமைகள் மறுகப்பட்டு ள்ளனவா என்பதைக் குழுவில் கலந்துரையாடுங்கள், கருத்துகளை எழுதி வெளியிடுங்கள்.

## செயல்பாடுகள்

- சரஸ்வதியைக் காணவில்லை; தோழிகள் தேடினர். சரஸ்வதி எங்கே போயிருப்பாள்? - வாசித்து எழுதுங்கள்.
- புத்தகம் வாங்க இயலவில்லையே என்னும் ஏக்கம் சரஸ்வதிக்கு ஏற்பட்டது போல் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுமானால் நாட்குறிப்பில் எவ்வாறு எழுதுவீர்கள்?
- குழந்தைகள் தினத்தன்று நடைபெறும் ஊர்வலத்தில் முழங்குவதற்குக் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வ யுறுத்தும் முத்திரை வாக்கியங்கள் எழுதுங்கள்.
- கதையின் முடிவை மாற்றி எழுதுங்கள்.
- “சரஸ்வதி குமுறிக் குமுறி அழுதாள்”.
  தரப்பட்டுள்ள வாக்கியத்தில் ஒரே சொல் இருமுறை வருவதைக் கவனியுங்கள். இதுபோன்ற வேறு தொடர்களைக் கூறுங்கள். அவை இடம் பெறுமாறு சிறு நிகழ்ச்சியை எழுதுங்கள்.

# மனப்புழுக்கம்

நல்லபண் டங்களைக் கண்டறியோம்! – ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்!
அல்லும் பகலும் அலைந்திடுவோம்! – பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்!

அன்னப்பால், காணாத ஏழைகட்கு – நல்ல
ஆவின் பால் எங்கே கிடைக்குமம்மா?
என்னப்பா! யாம்படும் பாட்டையெல்லாம் – சென்று
யாரிடம் சொல் அழுவோமம்மா!



ஆனிஆ டிமாதக் கொந்த லே – மந்தை
ஆடுகள் போலக் கொடுகிநிற்போம்!
வேனி ல் வெந்துடல் வேர்த்திடவே – வெயில்
வேளை அலைந்து திரிந்திடுவோம்!

சுற்றிய கந்தை ஒரு முழமாம்! – அதில்
தோன்றிய கீறலும் ஆயிரமாம்!
பற்றும் அழுக்கினைப் போக்கவென்றால் – உடை
பஞ்சு பஞ்சாகப் பறக்குமம்மா!

**–கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

## செயல்பாடுகள்

- பாடலை இசையோடு பாடுங்கள்.
- இந்தப்பாடலோடு கீழ் வரும் பாடலை ஒப்பிடுங்கள். உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.

பாகமா கச்செய்த பண்டமுண்போம்! - நன்றாய்ப்
பக்குவம் வந்த பழங்களுண்போம்!
தாகமா னாற்பல பானகமும் - தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம்!



காலத்துக் கேற்ற உடையணிவோம்! - வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்!
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து - மலர்
கூந்த ற் சூட்டி அழகுசெய்வோம்.

**-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

## செயல்பாடுகள்

- "கண்டறிவோம், உண்டறிவோம்" போன்ற ஓசை நயம் அமைந்த வேறு சொற்களைத் திரட்டி எழுதுங்கள்.
- ஏழை பணக்காரர் வேறுபாடுகள் சமூகத்தில் காணப்படுகின்றன. இவற்றை எவ்வாறு நீக்கலாம்? விவாதியுங்கள்; கருத்துகளை எழுதி வகுப்பில் வெளியிடுங்கள்.
- சமூகத்தில் துன்பப்படும் குழந்தைகளுக்கு எந்தெந்த வழிகளில் உதவலாம்? எழுதுங்கள்.

# ஈரமில்லாத இதயம்....

திருமால்புரம் என்ற ஊரில் ராஜ ங்கம் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் அன்பரசு.

ராஜ ங்கம் அந்த ஊரிலேயே பெரும்பணக்காரர். அவரது பரம்பரை வீடாக மூன்றடுக்கில் பெரிய மாடி வீடு இருந்தது.

இதே போல இன்னொரு மாடி வீடும் இருந்தது. அது முத்துச்சாமிக்குச் சொந்தமான வீடு. இந்த இரண்டு வீடுகளைத் தவிர மற்ற வீடுகள் எல்லாம் குடிசைகளே!

ராஜ ங்கம் பணக்கார வெறி கொண்டவர். அவர் வசதியானவர்களுடன் மட்டுமே பழகுவார், ஏழைகளை மிகவும் கேவலமாக நடத்தினார்.

ஆனால் முத்துச்சாமி அவ்வாறல்ல. பணக்காரராக இருந்தாலும் எல்லோருடனும் அன்பாகவும், ஏற்றத்தாழ்வில்லாமலும் பழகுபவர். ஏழைகள் என்ற பெயரால் மனிதர்கள் கொடுமைப்படுத்தப்படுவதை நினைத்து வேதனைப்படுபவர். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பவர். எனவே ஒரு ஏழைப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.



இதனால் ராஜ ங்கம் ஊர்க்கூட்டம் கூட்டி முத்துச்சாமியின் குடும்பத்தை ஊரை விட்டே விலக்கி வைத்தார்.

ஊர்க்காரர்கள் யாரும் அவர்களோடு பேசவோ, பழகவோ கூடாது. அவர்கள் ஊர்ப் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டனர்.

இதனால் வெளியூருக்குச் சென்று தண்ணீர் எடுத்து வந்தனர் முத்துச்சாமி குடும்பத்தினர்.

ஒருநாள் முத்துச்சாமியின் மகன் பாபு நோய்வாய்ப்பட்டுக் கிடந்தான். அப்போது உள்ளூர் டாக்டரை பாபுவிற்கு வைத்தியம் பார்க்க அழைத்தார் முத்துச்சாமி. ஆனால் ஊர்க்கட்டுப்பாட்டிற்குப் பயந்து டாக்டர் வர மறுத்து விட்டார்.

சில நாட்களுக்குப்பின்னர் திடீரென ஒரு நாள் மழை பெய்தது. கூடவே புயல்வேறு வீசியது. தொடர்ந்து மூன்று நாட்கள் பலத்த மழை பெய்தது. இதனால் ஊருக்குப் பக்கத்தி ருந்த ஏரி நிரம்பி உடையும் நிலைக்கு வந்தது. ஒரு மணி நேரத்திற்குள் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குப் போகுமாறு அறிவிக்கப்பட்டது.

ஒரு மணி நேரத்திற்குள் எங்கு போவது? என்ன செய்வது? எதை எடுப்பது? எதை விடுவது? என்று புரியாமல் உயிர் பிழைத்தால் போதும் என்று குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஊர் மக்கள் அனைவரும் ராஜ ங்கத்தின் வீட்டை நோக்கிச் சென்றனர். ராஜ ங்கமோ, யாரும் உள்ளே வரக்கூடாது என்று சொல் விட்டு வசதியானவர்களையும், தனக்கு வேண்டியவர்களையும் மட்டுமே உள்ளே அழைத்தார்.

மற்றவர்களையெல்லாம் “நீங்கள் ஏழைகள். உயிரோடு இருந்தாலும் சரி செத்தாலும் சரி. எனக்குக் கவலையில்லை’’ என்று கூறி, இரக்கம், மனிதாபிமானம் எதுவும் இல்லாமல் வெளியே துரத்தினார்.

“ஐயா! உங்கள் கால்களில் விழுந்து கெஞ்சுகிறோம். எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்’’ என்று எல்லோரும் அழுத வண்ணம் கெஞ்சினர்.

“எல்லோரும் வெளியே போங்கடா….!’’ என்று அவர்களைப் பிடித்துத் தள்ளினார்.

ராஜ ங்கத்தின் செயல் மகன் அன்பரசுவிற்குப் பிடிக்கவில்லை.

“அப்பா! நீங்கள் செய்வது சரியல்ல. இப்படிப்பட்ட ஆபத்தான நேரத்தில் பணக்கார வெறி கொண்டு பல உயிர்களைப் ப கொடுக்க நினைக்கிறீர்களே! அவர்களை உள்ளே விட்டு எல்லோரையும் காப்பாற்றுங்கள்!’’ என்றான்.

"நீ சும்மா கிடடா!. எனக்குத் தெரியும் யாரை உள்ளே அனுமதிக்க வேண்டு மென்று! இந்தப் பசங்களை உள்ளே விடமாட்டேன். மீறி வந்தால் அடித்துக் கொன்று விடுவேன்'' என்று மிரட்டினார்.



அந்த நேரத்தில் ஊராரால் ஒதுக்கப் பட்ட முத்துச்சாமியும் அவர் மக னும் ஓடோடி வந்தனர். "எல் லோரும் என் வீட்டிற்கு வாருங் கள்! ஏழை பணக்காரன் வேற்று மையைப் பார்க்க இதுவா நேரம்? ஏழையென்று சொல் க் கொண்டு வீணாக இறந்து விடாதீர்கள்! வாருங் கள் எங்கள் வீட்டிற்கு!'' என்று அனை வரையும் அழைத்தனர்.

"அப்பா! பாவம் ஊர் மக்கள்! அவர்களை உள்ளே விடுங்கள்!'' என்றான் அன்பரசு மீண்டும்.

எல்லா மக்களும் "ஐயா! எங்களைக் காப்பாற்றுங்கள்!'' என்று கெஞ்சி னார்கள்.

"போங்கடா! நீங்க செத்தால் என்ன? பிழைத்தால் என்ன?'' என்று அவர் களை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினார்.

"அப்பா! சாதி இரண்டொழிய வேறில்லை;

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்"

என்றார் ஔவையார். இத்தனை உயிர்களையும் ப கொடுக்க நினைக்கிற உங் களை விடக் கேவலமான சாதி வேற இல்லை. இப்படிப்பட்ட ஈரமில்லாத இதயம் கொண்ட உங்கள் வீட்டில் இருக்க நானே விரும்பவில்லை'' என்று கோபமாகக் கூறிக்கொண்டு வீட்டி ருந்து வெளியேறினான் அன்பரசு.

"ஊர் மக்கள் எல்லோரும் ஒதுக்கி வைத்துவிட்ட பிறகும் கூட, ஊர் மீதும், ஊர் மக்கள் மீதும் அக்கறையும் நலனும் கொண்டு நமக்கெல்லாம் உதவுவதற்

காக ஓடோடி வந்து அழைக்கிறாரே, முத்துசுவாமி ஐயா! அவரே உயர்ந்தவர்!எல்லோரும் வாருங்கள்! நாம் முத்துச்சாமி ஐயா வீட்டிற்குச் செல்லலாம்'' என்று கூறியவாறு புறப்பட்ட அன்பரசுவின் பின்னால் ஊர்மக்கள் அனைவரும் அணி வகுத்துச் சென்றனர்.

முத்துச்சாமி, அவர்களை அன்புடன் வரவேற்று ஆறுதல் கூறி வேண்டிய உதவிகளைச் செய்தார்.

அவருடைய கருணை உள்ளத்தைப் புரிந்துகொண்ட ஊர் மக்கள் அனைவரும் தங்கள் உயிரைக் காப்பாற்றிய முத்துச்சாமியோடு சேர்ந்துகொண்டனர்.

"சாதி இரண்டொழிய வேறில்லை'' என்பதைப் புரிந்துகொண்ட மக்கள் அனைவரும் முத்துச்சாமியைத் தங்கள் ஊர்த்தலைவராக அறிவித்துக் கவுரவித்தனர்.

**– மணிமேகலை ராமசாமி**

## செயல்பாடுகள்

- இந்தக் கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? ஏன்?
- ராஜ ங்கத்தின் செயல் சரியா? தவறா? விவாதித்துக் கருத்துகளை எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் இதுபோன்ற வேற்றுமைகள் இருப்பின் அவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?
- ஈரம், இல்லாத ஆகிய இரு சொற்கள் இணைந்து "ஈரமில்லாத" எனும் சொற்றொடர் உருவாகிறது.இது போன்று என்னென்ன சொற்கள் இணைந்து கீழ்வரும் தொடர்கள் அமைகின்றன?
- இரண்டொழிய
- வேறில்லை
- ஏழையென்று
- இரக்கமில்லாதவன்